| | | |
|---|---|---|
| **O.S No.** | **:** | **191/2016** |
| **DATE** | : | **18.08.2025** |
| **NAME** | : | **கங்காதரன்** |
| தந்தை பெயர் | : | **தானிவேல்** |

**வா.சா.2 குறுக்கு விசாரணை**

1. நான் அவளூர் கிராமத்தில் 2005–2009 வரை கூலி வேலை செய்து வருகிறேன். சாட்சியிடம் வா.சா.ஆ.5 சான்றிட்ட நகல் ஆவணம் காண்பிக்கப்பட்டது. அதில் வலது பக்கத்தில் உள்ள D.கெங்காதரன் என்ற கையெழுத்து தன்னுடையது என்று சாட்சி ஒப்புக் கொண்டார். இவ்வழக்கின் பிரதிவாதியை எனக்கு தெரியாது. எனது தந்தை தானிவேலுக்கு 5 மகன்கள், 1 மகள் அவர்களின்பெயர்கள் கங்காதரன், கல்யாணசுந்தரம், முனியன், ராதா, ரமேஷ், மகாலட்சுமி ஆவர். காஞ்சிபுரம் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 115/2009 என்ற வழக்கில் நான் 2ம் பிரதிவாதி மேற்படி வழக்கை இவ்வழக்கின் பிரதிவாதி எங்கள் மீது தாக்கல் செய்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

2. எனது பிரமாண வாக்குமூலத்தை நான் படித்து பார்த்து தான் கையொப்பம் போட்டேன். சாட்சியிடம் அவர் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலம் காண்பிக்கப்பட்டது அதன் 1ம் பத்தியில் மேற்படி பிரதிவாதி தாக்கல் செய்த வழக்கு பற்றி குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இவ்வழக்கில் வாதியின் கணவர் சேகர் என்னை சாட்சியம் அளிக்க அழைத்து வந்தார்.

3. தாவா சொத்து எனது பாட்டனார் வழி சொத்து என்றால் சரிதான். தாவா சொத்தின் சர்வே எண் 496/1பி2 ஆகும். இதே சர்வே எண்ணிற்காக தான் பிரதிவாதி மேற்படி அசல் வழக்கு எண் 115/2009 தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். 2005ம் ஆண்டிற்கு முன்னரே எனக்கும் பிரதிவாதிக்கும் சொத்து சம்மந்தமாக பிரச்சனை இருந்தது என்று சொன்னால் சரியல்ல, எனக்கு பிரதிவாதி யார் என்றே தெரியாது. காஞ்சிபுரம் சார்பு நீதிமன்றத்தில் மேற்படி பிரதிவாதி தாக்கல் செய்த வழக்கில் பிரதிவாதிக்கு இந்த தாவா சொத்தில் உரிமை உள்ளதாக தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

4. தாவா சொத்து சம்மந்தமாக நாங்கள் பொது அதிகாரம் எழுதி கொடுத்து சேகர் என்பவர் வாதிக்கு எவ்வளவு ரூபாய்க்கு கிரையம் அளித்தார் என்றால் அது எனக்கு

தெரியாது. 2005ல் கிரையம் கொடுக்கப்பட்டது. எங்களது முகவரிடம் இருந்து தாவா சொத்தை வாதிக்கு விற்றதற்கு பிறகு கணக்கு வழக்குகளை வாங்கிவிட்டோம். தாவா சொத்தில் பிரதிவாதி தான் பயிர் வைத்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. வாதிக்கு தாவா சொத்தின் சுவாதீனத்தை 2005ல் ஒப்படைத்தோம். இவ்வழக்கில் பிரதிவாதிக்கும் எங்களுக்கும் 2009ல் தகராறு ஏற்பட்டு அது சம்மந்தமாக குற்றவியல் வழக்கு மாண்புமிகு குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்2 முன் நிலுவையில் உள்ளது என்று சொன்னால் சரிதான்.

5. பிரதிவாதி எங்களுடன் பிறந்த சகோதரர் அதனால் தான் எங்களது பிதுராஜ்ஜிய சொத்தில் அவருக்கு பங்கு உண்டு என்று தீர்ப்பானது என்று சொன்னால் சரியல்ல. எங்களுக்கும் பிரதிவாதிக்கும் தனிப்பட்ட முறையில் பிரச்சனை இருப்பதால் தான் அவரை பழி வாங்கும் நோக்கத்தில் சேகருடன் சேர்ந்து இவ்வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. 2005ல் எழுதி கொடுக்கப்பட்ட பொது அதிகார பத்திரத்தில் பிரதிவாதியின் கையெழுத்து இல்லை என்று சொன்னால் சரிதான்.

6. சாட்சியிடம் வா.சா.ஆ.5 சான்றிட்ட நகல் ஆவணம் காண்பிக்கப்பட்டது. மேற்படி ஆவணத்தில் நான் வெளியூருக்கு வேலைக்கு செல்வதால் மேற்படி ஆவணம் எழுதி கொடுக்கப்பட்டதாக குறிப்பிட்டு சொல்லியுள்ளேன், ஆனால் மேற்படி சாட்சியத்தில் 2005–2009 வரை அவளூர் கிராமத்தில் கூலி வேலை செய்வதாக குறிப்பிட்டு ஒப்புக் கொண்டுள்ளேன் ஆகவே நான் மேற்படி ஆவணத்தில் சொன்ன விவரங்கள் பொய் என்று சொன்னால் சரியல்ல.

**இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக் கொள்ளப்படுகிறது.**

(S/d.Fanny Rajan)
Principal District Munsif,
Kancheepuram.